பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
03 07 2026 FRIDAY 6 30 PM
வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நடப்பு நிதியாண்டின் முதலாவது காலாண்டில், காபி ஏற்றுமதி 28 சதவீதம் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.
- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த இரண்டு நாட்களில் வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று, இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது

>>>>>>><<<<<<<

நடப்பு நிதியாண்டின் முதலாவது காலாண்டில், காபி ஏற்றுமதி, 28 சதவீதம் அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக நாளிதழில் வெளியான கட்டுரையையும் வெளியிட்டுள்ளார்.

இந்த நிதியாண்டில் காபி ஏற்றுமதி தொடர்ந்து அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 16வது நிதி ஆணையம் 4 லட்சத்து 35 ஆயிரத்து 236 கோடி ரூபாயை பரிந்துரைத்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இதனை முறையாக செயல்படுத்துவது குறித்து விவாதிப்பதற்காக தேசிய பயிலரங்கு இன்று நடைபெற்றதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து, முதலமைச்சர் திரு. விஜய் இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த துறையின் செயல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் முதலமைச்சர் விரிவாக கேட்டறிந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கு தமிழக அரசு ஊக்கமளிக்கும் என்று தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா கூறியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - கீர்த்தனா 40 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

முதலமைச்சரை அவதூறாக பேசியதாக கூறி முன்னாள் அமைச்சர் திரு. அனிதா ராதாகிருஷ்ணனை காவல்துறையினர் கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்கள் பணியில் ஈடுபட்டிருந்த திரு. அனிதா ராதாகிருஷ்ணனை அவசர அவசரமாக கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன என்றும் அவர் வினவியுள்ளார்.

வாக்களித்த மக்களுக்கு நன்மை செய்யாமல், குதிரை பேரத்தின் மூலமாக ஆட்சியை தக்கவைத்து, விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை கைது செய்து காலம் கடத்திவிடலாம் என்று முதலமைச்சர் எண்ணுவதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் குறை கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சிவகங்கை மாவட்டத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தை பறிமுதல் செய்ததற்காக காவல் உதவி ஆய்வாளர் திரு. துரைசிங்கம், திமுக பிரமுகர்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதை த.வெ.க. அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

த.வெ.க. சட்டப்பேரவை உறுப்பினருக்கு 35 கோடி ரூபாய் வழங்க முன்வந்தது தொடர்பாக, காவல்துறை விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மாணிக்கம் தாகூர் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீபெரும்புதூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மிக முக்கியமான இந்த வழக்கினை காவல்துறையினர் சரியான முறையில் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதுபோன்ற செயல்கள் ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் திரு. மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் தடுப்பணைகளை கட்டுவதில் திராவிட கட்சிகள் கவனம் செலுத்தவில்லை என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது அணை கட்டுவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நடைபயணம் மேற்கொண்டு வருவதாக கூறினார்.

இப்பிரச்சினையில் நடுவர் ஆணையம் அமைக்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி வலியுறத்தினார்.

>>>>>>><<<<<<<

தனியார் பேருந்துகளின் தன்னிச்சையான கட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெரும்பாலான மாவட்டங்களில் தனியார் பேருந்து நிறுவனங்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி கட்டணத்தை உயர்த்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு எதிராக போக்குவரத்து துறை அதிகாரிகளும், மாவட்ட நிர்வாகமும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் திரு. சண்முகம் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த இரண்டு நாட்களில் வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte -வி ஆர் துரை - 42 Sec.)*

>>>>>>><<<<<<<

மாவட்டச் செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஹெல்மெட் அணிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் இன்று மேற்கொண்டார்.

>>>>>>><<<<<<<

நாமக்கல் மாவட்டத்தில், ஆயுதப்படை காவலர்களுக்கு, பேரிடர் காலங்களில் பொதுமக்களை எவ்வாறு காப்பது என்பது குறித்த 3 நாள் செயல்விளக்க ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

வேலூர் மாவட்டத்தில் பொதுவிநியோக திட்ட பயனாளிகளை சரிபார்க்கும் பணி, தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி. லீலா அலெக்ஸ் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த மாணவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணிபுரிவதற்கான நியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி. Vandana Garg இன்று வழங்கினார்.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

செக்குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் Sheetal Devi - Shyam Sunder Swamy இணை 147-143 என்ற புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவின் Ken Swagumilang - Teodora இணையை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

மற்றொரு இறுதியாட்டத்தில் Bhawana - Harvinder Singh இணை, 6-2 என்ற புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவின் Kholidin - Noviera Ross இணையை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியின் ஒற்றையர் பிரிவுகளில் Sheetal Devi, Harvinder Singh ஆகியோரும் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>>>><<<<<<<

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Syndrela Das - Divyanshi Bhowmick இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்த இணை சீனாவின் Yao Ruixuan – Jiang Yiyi இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Syndrela Das அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் குகேஷ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

>>>>>>><<<<<<<

19 மற்றும் 23 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டி, ஜகார்த்தாவில் இன்று தொடங்கியது.

>>>>>>><<<<<<<

இலங்கைக்கு எதிரான, 19 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 49 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

புதுச்சேரியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்தது.

210 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இலங்கை அணி, 41 புள்ளி இரண்டு ஓவரில் 160 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

3 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை முதல் இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.

>>>>>>>END<<<<<<<